FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364142

1. District : மாவட்டம் Salem | PS: காவல்நிலையம் V2.AC | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 03/AC/2026 | Date: நாள் 08.05.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018. | Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) 02.05.2026 at about 10.15 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 2) 07.05.2026 at about 11.00 hrs & 17.00 hrs & 17.15 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.05.2026 | Time : நேரம் 09.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.05.2026 | Time : நேரம் 10.45 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 3 1/2 KM East
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Ward Office, Ammapet Zone, Salem City Municipal Corporation.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Kulandaisamy | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Velayutham
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 10.05.1966 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Unskilled Worker/ Fitter | (g) Address : முகவரி No.4/72, Seshan Charadi via, Mettupatti, Valapady Taluk, Salem Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Deepan, Junior Assistant, Ward Office, Ammapet Zone, Salem City Municipal Corporation.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted

Details enclosed in Seperate Sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Kullammal 8.5.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

08/05/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

08.05.2026
11.45 hrs

Name: பெயர் ...M. Nallammal,
Rank: நிலை .....No. எண் .....

Inspector of Police,
V&AC, Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 08.05.2026-ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.நல்லம்மாள் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, V.குழந்தைசாமி, S/o.வேலாயுதம், எண். 4/72, சேசன்சாவடி வழி, மேட்டுப்பட்டி, வாழப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் V.குழந்தைசாமி, S/o.வேலாயுதம், எண். 4/72, சேசன்சாவடி வழி, மேட்டுப்பட்டி, வாழப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம் மாவட்டம். ஐயா, நான் வாழப்பாடி வட்டம், மேட்டுப்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 1988-ம் வருடம் முதல் சேலம் மாநகராட்சியில் தண்ணீர் திறப்பாளர் / செயல்திறனற்ற பணியாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 முதல் பிட்டர் பணியும் கூடுதலாக கவனித்து வருகிறேன். தற்பொழுது அம்மாபேட்டை மண்டலத்தில் வார்டு எண்.36 ஐ கவனித்து வருகிறேன். நான் பிட்டர் என்பதால் அந்த வார்டில் புதிய குடிநீர் இணைப்புக்கான மனுக்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கப்படும்போது எனக்கு ஒதுக்கப்பட்ட Login-id-ல் அந்த மனுக்கள் வரும். அந்த மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து, இடத்தை பார்வையிட்டு பைப்லைன் போடுவதற்கான வரைபடம் தயார் செய்து AE மூலமாக சமர்ப்பிக்கப்பட்டு, மதிப்பீட்டு தொகை விண்ணப்பதாரரால் செலுத்தப்பட்டவுடன் குடிநீர் இணைப்பிற்கான உத்தரவு வழங்கப்படும். நான் வருகின்ற 31.05.2026-ல் வயது மூப்பு அடிப்படையில் பணி ஓய்வு பெற உள்ளேன். அதற்காக எனது பெயரில் ஆடிட் நிலுவை எதுவும் இல்லை என்ற அறிக்கை தேவையாக உள்ளது. அதற்கான கோப்பு எங்கள் அம்மாப்பேட்டை மண்டல வார்டு அலுவலக அ-3 இருக்கையில் நிலுவையில் இருந்து வருகிறது. அது சமப்ந்தமாக 02.05.2026-ம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு அலுவலகம் சென்று அந்த இருக்கையை கவனித்துவரும் இளநிலை உதவியாளர் திரு.தீபன் அவர்களை சந்தித்து கோப்பு என்னாச்சு என்று கேட்டேன். அதற்கு அவர் 2023-24-ம் ஆண்டிற்கான ஆடிட்டிங் ரிப்போர்ட்டில் குடிநீர் இணைப்பு கட்டணம் செலுத்தியது

சம்பந்தமாக எனது பெயரில் ஒரு பாரா நிலுவையில் உள்ளது என்று தெரிவித்து, அதை சரிசெய்து ஒய்வு பெறுவதற்கான NOC வழங்க ரூ.10,000/- தனியாக கொடுக்கவேண்டும் என்று சொன்னார். நான் சம்பளம் இன்னும் வரவில்லை. என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, கையில் ரூ.2,000/- இருப்பதாக சொன்னேன். இப்போதைக்கு அதை கொடுங்க, மீதி பணம் ரூ.8,000/-ஐ சம்பளம் வந்தவுடன் கொடுத்திடுங்க என்று சொல்லி என்னிடமிருந்து ரூ.2,000/-ஐ பெற்றுக்கொண்டார். எனக்கு 07.05.2026-ம் தேதியன்று காலைவரை சம்பளம் வரவில்லை என்பதால், அன்று காலை சுமார் 11.00 மணியளவில் அலுவலகம் சென்று திரு.தீபன் அவர்களை சந்தித்து விபரம் சொன்னேன். அப்போது அவர் என்னிடம் ஆடிட் பாராவில் உள்ள தொகை மொத்தம் ரூ.2,467/-ஐ செலுத்திவிட்டு அந்த ரசீது நகலை கொண்டுவந்து கொடுக்கும்படியும், கொடுக்கவேண்டிய மீதிதொகை ரூ.8,000/-ஐ இன்று (07.05.2026) இரவுக்குள் சம்பளம் போட்டுவிடுவார்கள், நாளை கொண்டுவந்து கொடுங்க என்றும் சொன்னார். அதன் பின்னர் உடனே நான் பணம் ஏற்பாடு செய்து ரூ.2,467/-ஐ மாநகராட்சியில் செலுத்தி பில் பெற்று அதனை ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டுபோய் 07.05.2026-ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு திரு.தீபன் அவர்களை அவரது இருக்கையில் சந்தித்து ரசீது நகலை கொடுத்தேன். அவர் அதனையும் எனது கோப்பில் வைத்துவிடுவதாகவும், மீதி தொகை ரூ.8,000/-ஐ கொடுக்கும்படியும் சொன்னார். நான் அவரிடம் பாத்து செஞ்சுகொடுங்க சார். பென்சனா வாங்கப்போறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுத்தாத்தால்தான் வேலை முடியும் என்று சொன்னார். நான் அலுவலகத்தைவிட்டு வெளியே வந்துவிட்டு, எனக்கு பணம் கொடுக்கவிருப்பமில்லாததால் மீண்டும் உடனே மாலை சுமார் 05.15 மணிக்கு தீபன் அவர்களை சந்தித்து ஏதாவது செய்யமுடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர், நாளைக்குள் பணம் ரூ.8,000/-த்துடன் வந்து பாருங்க என்று உறுதியாக சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கு சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.தீபன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எனது பணிஓய்வுக்கான தடையில்லா சான்று பெற விருப்பம் இல்லை. எனவே அவர் கேட்ட பணத்துடன் வந்துள்ளேன். அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/- XXXXXX (V.குழந்தைசாமி) 8.5.2026 Sir, Received the above computer typed

complaint on 08.05.2026 at about 09.30 hrs. Sd xxxx (M.Nallammal) 08/05/2026, Inspector of Police, V & AC, Salem.

Sir, The genuineness of the informant was verified through sources and nothing came to adverse and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.03/AC/2026 u/s 7(a) of PC Act, 1988 as amended in 2018 on 08.05.2026 at 10.45 Hrs. Sd xxxx (M.Nallammal) 08/05/2026, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(M.நல்லம்மாள்) 08/05/2026.
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.